தருமபுரி வேளாண்மை இணை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
பிறப்பிப்பவர் : திருமதி. வசந்த ரேகா, எம்.எஸ்ஸி., (விவ.)
********

செ.மு. ஆ. எண். அ2 / 4880/ 2020 நாள்:– 22.01.2021

பொருள் : பணிக்குழு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – 2018–19 மற்றும் 2019–20–ஆம் ஆண்டிற்கான தொகுதி-IV (Combined Civil Services Examination-IV) நேரடி போட்டித் தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் (பி.அ.) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு இவ்வலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டது – பணிநியமனம் செய்து ஆணையிட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை :
1. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செ.மு.ஆ. எண். அநிபி5/ 22094 / 2020, நாள்–05.08.2020.
2. வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செ.மு.ஆ. எண். அநிபி5/ 22094 / 2020–2, நாள்– 13.08.2020.
3. இவ்வலுவலக செ.மு.ஆ. எண்.அ2/4880/2020,நாள்: 14.08.2020 மற்றும் 17.08.2020.

~~oOo~~

ஆணை:–

பார்வை–(1) மற்றும் (2)–இல் காணும் செயல்முறை ஆணைப்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2018–19 மற்றும் 2019–20–ஆம் ஆண்டிற்கான தொகுதி-IV (Combined Civil Services Examination-IV) நேரடி போட்டித் தேர்வு மூலம் இளநிலை உதவியாளர் (பி.அ.) பதவிக்கு தற்காலிக அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு இவ்வலுவலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு.சே.உதயகுமார், மற்றும் திரு.ர.நாவல்ராஜ், ஆகியோர்களுக்கு பார்வை(3)இல் காணும் செயல்முறை ஆணைப்படி இவ்வலுவலகத்தில் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

மேலும் பார்வை(1) மற்றும் (2)ல் காணும் வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தற்காலிகமாக பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை இளநிலை உதவியாளர் (பி.அ.) ஆக பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, மேற்கண்ட பணியாளர்கள் இளநிலை உதவியாளர் (பி.அ.) ஆகப் பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | பெயர்/பதவி பணிப்புரியும் அலுவலகம் | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | திரு.சே.உதயகுமார், இளநிலை உதவியாளர் (பி.அ.) | 10.06.1994 | 18.08.2020 மு.ப. | 18.08.2020 மு.ப. |
| 2. | திரு.ர.நாவல்ராஜ், இளநிலை உதவியாளர் (பி.அ.) | 09.04.1998 | 24.08.2020 மு.ப. | 24.08.2020 மு.ப. |

மேலும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (பணி நிபந்தனைகள் சட்டம் – 2016) விதி 28(1)–ன்படி மேற்காணும் பணியாளர்கள் இளநிலை உதவியாளர் (பி.அ.)–ஆக பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று வருட தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

தனியர்கள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 34 இணைப்பு 5–ன்படி தகுதிகாண் பருவத்தில் வைக்கப்பட்ட நாளிலிந்து இரண்டாண்டு காலத்திற்குள் பவானிசாகரில் அளிக்கப்படும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்யவேண்டும்.

த.பி.பா...

Scanned by CamScanner

இப்பணிவரன்முறை ஆணை மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள தொகுதி–4, பணிகள் 2018–19 மற்றும் 2019–20–ஆம் ஆண்டு தொடர்பான நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்படும் இறுதி தீர்ப்புகளுக்கு கட்டுப்பட்டதாகும் என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும் இவர்களுக்கு தகுதிகாண் பருவம் நிறைவு செய்தமைக்கு ஆணை வழங்கப்பட்ட பின்னரே அரசு விதிமுறைகளின்படி இரண்டாவது மற்றும் தொடர் ஊதிய உயர்வுகள் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–வசந்த ரேகா,
வேளாண்மை இணை இயக்குநர்,
தர்மபுரி.

பெறுநர்

1. திரு.சே.உதயகுமார், இளநிலை உதவியாளர் (பி.அ.), இவ்வலுவலகம்.
2. திரு.ர.நாவல்ராஜ், இளநிலை உதவியாளர் (பி.அ.), இவ்வலுவலகம்.

நகல்–வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
(அபபி 5) பிரிவிற்கு
நகல் – பணிப்பதிவேட்டிற்கு
நகல் – இருப்புக் கோப்பு
நகல் – உதிரி.

// ஆணைப்படி //

27/1/21

ஆட்சி அலுவலர்

27/01/2021

Scanned by CamScanner